பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

22 06 2025 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா சட்டீஸ்கரில் இன்று நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கை குறித்து ஆலோசானை நடத்தவுள்ளார்.

2. அண்டை நாடுகளுடன் நிலையான நட்புறவை பராமரிக்கவே இந்தியா விரும்புவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் சாலை மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. ஈரான் அணு உலைகள் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா அதற்கான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

5. ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மணிஷா ராமதாஸ் பட்டம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, சட்டீஸ்கர் மாநிலத்தில் இன்றும், நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

தலைநகர் ராய்பூரில், 400 கோடி ரூபாய் செலவில் சுமார் 40 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டும் அவர், மத்திய தடய அறிவியல் ஆய்வகத்திற்கும் இன்று அடிக்கல் நாட்டவுள்ளார்.

அதனைத்தொடர்ந்து, சட்டீஸ்கர் மற்றும் அதன் அண்டை மாநிலங்களை சேர்ந்த காவல்துறை உயரதிகாரிகளுடன் பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆய்வு நடத்தவுள்ள உள்துறை அமைச்சர், நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கை குறித்தும் ஆலோசனை நடத்தவுள்ளார்.

நாளை பஸ்தார் மாவட்டத்துக்கு உட்பட்ட நாராயண்பூர் செல்லும் அவர், எல்லை பாதுகாப்புப்படை முகாமை பார்வையிட்டு, வீரர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

<<<<<<>>>>>>

அண்டை நாடுகளுடன் எல்லா தருணங்களிலும் மென்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை எதிர்பார்க்க முடியாது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற அவர், அண்டை நாடுகளில் யார் ஆட்சி செய்தாலும், நிலையான நட்புறவை பராமரிக்கவே இந்தியா விரும்புவதாக கூறினார்.

இந்தியாவுடன் நல்லுறவு வைத்துக்கொண்டால், தங்களுக்கு நன்மை ஏற்படும் என்பதையும், இல்லாவிட்டால் அதன் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை அண்டை நாடுகள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் தவிர பிற அண்டை நாடுகள் இதனை உணர்ந்திருப்பதாக கூறிய திரு ஜெய்சங்கர், ஆனால், பாகிஸ்தான் மட்டும் ராணுவத்தை முன்நிறுத்தி செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>

மதுரையில் இன்று மாலை நடைபெறவுள்ள முருக பக்தர்கள் மாநாட்டையொட்டி, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாநகர காவல் ஆணையர் திரு லோகநாதன் தலைமையில் சுமார் ஆயிரத்து 500 காவல்துறையினர் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உலகம் முழுவதிலுமிருந்து முருக பக்தர்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் நடத்தப்படும் இந்த மாநாட்டில் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், ஆந்திரப்பிரதேச துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாண், உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கின்றனர்.

மலேசியா, இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மற்றும் மாநிலங்களில் இருந்து 5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த மாநாட்டில் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் வழிபாடு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன், இந்த மாநாட்டில் ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் ஒன்றிணைந்து கந்தசஷ்டி கவசத்தைப் பாடி கின்னஸ் சாதனை படைக்க இருப்பதாக தெரிவித்தார்.

மாநாட்டின் ஒரு பகுதியாக, மதுரை பாண்டிகோயில் சாலையில் உள்ள மாநாட்டுத் திடலில், அறுபடை முருகன் கோவில்களின் மாதிரிகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***('Voice Byte ' – ரகுராஜா – 37 'Sec)'***

இந்த நிகழ்ச்சி ஆகாஷ்வாணி, ரெயின்போ பண்பலை அலைவரிசையில் மாலை 5 மணி முதல் ஐந்தரை மணி வரை நேரலையாக ஒலிபரப்பாகிறது.

இந்த மாநாட்டின் தொகுப்பு அகில இந்திய வானொலியின் அனைத்து பிரதான அலைவரிசைகள் மற்றும் **DTH**-சேவையில் இரவு 7 மணி முதல் 7.10 வரை ஒலிபரப்பாகிறது.

<<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு அடைக்காலம் தந்த குற்றச்சாட்டின்பேரில் இரண்டு பேரை தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பஹல்காமை சேர்ந்த இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகள் லஷ்கர் இ தொய்பா அமைப்பை சேர்ந்த பாகிஸ்தானியர்கள் என்று வாக்குமூலம் அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் ஈடுபடுவதற்குமுன் குற்றவாளிகள் மூன்று பேரும் மலையடிவாரத்தில் உள்ள ஒரு தற்காலிக கூடாரத்தில் தங்கியிருந்ததாகவும் அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளை தாங்கள் செய்து கொடுத்ததாகவும், கைது செய்யப்பட்ட நபர்கள் ஒப்புக்கொண்டுள்ளதாக என் ஐ ஏ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<<<<<<>>>>>>

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ எஸ் ஐ-க்கு ரகசிய தகவல்களை அளித்த குற்றச்சாட்டின்பேரில் பஞ்சாபை சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் அமிர்தசரஸ் ஊரக காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் குர்ப்ரீத் சிங், ஷாகில் மாசி ஆகிய இருவரும், கைது செய்யப்பட்டதாக அம்மாநில காவல்துறை டி ஜி பி திரு கௌரவ் யாதவ் தெரிவித்துள்ளார்.

இவர்களில் குர்ப்ரீத் சிங், ஐ எஸ் ஐ அமைப்புடன் நேரடி தொடர்பில் உள்ளதாகவும், இந்தியாவின் பாதுகாப்பு குறித்த ரகசிய தகவல்களை பென் ட்ரைவ் வாயிலாக ஐ எஸ் ஐ-க்கு வழங்கியது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர்களிடமிருந்து செல்போன் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு, தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு கௌரவ் யாதவ் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

பொருளாதார வளர்ச்சிக்கு சாலை கட்டமைப்பு வசதிகள் அவசியம் என்பதை கருத்தில்கொண்டு, தமிழகத்தில் சாலை மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில் 17 ஆயிரத்து 154 கோடி ரூபாய் செலவில் 9 ஆயிரத்து 620 கிலோமீட்டர் தொலைவுக்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆறாயிரம் கோடி ரூபாய் செலவில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத்திட்டம், 4 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் செலவில் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்படுத்தப்பட்டிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதேபோன்று, தேசிய நெடுஞ்சாலைகள், தரைப்பாலங்கள், ரயில்வே மேம்பாலங்கள், புறவழிச்சாலை போன்ற பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஒலிம்பிக் தின ஓட்டத்தை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா ஆகியோர் கூட்டாக தொடங்கிவைத்தனர்.

தில்லி ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் இருந்து புறப்பட்ட இந்த ஓட்டத்தில், ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்த ஏதுவாக, விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திருமதி ரேகா குப்தா குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

ஈரான் அணு உலைகள் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா அதற்கான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு சையது அப்பாஸ் அராச்சி கூறியுள்ளார்.

**‘Fordow, Natanz ’**மற்றும் **‘Esfahan** ஆகிய இடங்களில் உள்ள ஈரானின் அணுஉலைகள் மீது இஸ்ரேலுடன் இணைந்து, அமெரிக்கா இன்று அதிகாலை தாக்குதல் நடத்தியது.

இதனை அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்பும் உறுதி செய்த நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த தாக்குதலை நடத்தியிருப்பதன்மூலம், ஐ நா பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினரான அமெரிக்காவே, ஐ நா விதிமுறைகள் மற்றும் அணுசக்தி உடன்பாடு குறித்த சர்வதேச விதிமுறைகளை மீறியிருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

ஆக்கப்பூர்வ பணிகளுக்காக ஈரான் பயன்படுத்திவரும், அணு உலைகள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈரான் அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலால் மோசமான விளைவுகள் ஏற்படக்கூடும் என ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸும் கவலை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மணிஷா ராமதாஸ் பட்டம் வென்றார்.

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-18, 17-21, 21-15 என்ற செட் கணக்கில், சீனாவின் **Yang Qiuxia** –வை வென்றார்.

<<<<<<>>>>>>

ஆசிய ஸ்நூக்கர் சாம்பியன் போட்டி இன்று கொழும்பில் தொடங்குகிறது.

வரும் 28-ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி, பராஸ் குப்தா, புஷ்பேந்தர் சிங் உள்ளிட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<<<>>>>>>

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு ஆட்டங்களில் இந்தியா இன்று பெல்ஜியம் அணியை எதிர்கொள்கிறது.

பெர்லினில் நடைபெற்று வரும் நான்கு நாடுகள் பங்கேற்கும் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் திண்டுக்கல் - சேலம் அணியையும், திருப்பூர் - மதுரை அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<*END*>>>>>>